துறை ரீதியாக நடவடிக்கை எடுத்து, பகுதிநேர நியாய விலைக் கடை திறப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.*

திரு. தூசி கே. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி கலந்த வணக்கத்தைச் சொல்லி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 163, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

163—

மின் கட்டண வசூல் மையம்

***7214—திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டி நகர் பகுதியில் மின் கட்டண வசூல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொட்டாம்பட்டி நகரில் மின் கட்டண வசூல் மையம் அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். கொட்டாம்பட்டிக்கு அருகில் ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் துணை மின் நிலையம் இருக்கிறது. அங்கே மின் வாரியப் பிரிவு அலுவலகம் இருக்கிறது. அங்கே மின் கட்டணம் செலுத்துவதற்கு வசதி இருக்கின்ற காரணத்தினால், வரிசையில் நிற்க வேண்டிய தேவையில்லை என்பதை மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும், மாண்புமிகு அம்மா அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதி, கொட்டாம்பட்டியில் சிங்கம்புனரி விலக்கு அருகில் இயங்கிவரும் மின் கட்டண வசூல் மையம் கொட்டாம்பட்டி பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. எனவே, பொதுமக்கள் நலன் கருதி பேருந்து நிலையம் அருகில் மின் கட்டண வசூல் மையம் அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், மேலூர் தொகுதியில் அழகர்கோவில், கருங்காலக்குடி, கீழையூர், மேலூர் கிழக்கு, மேலூர் நகர் ஆகிய உதவி மின் பொறியாளர் அலுவலகங்களும், மேலூர் வடக்கு, மேலூர் தெற்கு ஆகிய உதவி செயற் பொறியாளர் அலுவலகங்களும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இவற்றிற்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர மாண்புமிகு அம்மாவின் அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட பகுதி ஒன்றரை கிலோ மீட்டர் தூரம்தான் இருக்கிறது. அதுபோக வீட்டிலிருந்தே கணினி வாயிலாக மின் கட்டணத்தைக் கட்டிக்கொள்ளலாம். அதுதவிர கொட்டாம்பட்டி நகர் பகுதியில் தபால் நிலையம் இருக்கின்றது. Tamilnadu Mercantile Bank, Central Bank of India இருக்கின்றது. அந்த வங்கிகள்மூலமும் கட்டணம் செலுத்தலாம். ஆகவே, எளிதாக மின் கட்டணம் கட்டிக்கொள்ளும் வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினால் தனியே ஒரு மின் கட்டண வசூல் மையம் அமைக்க வேண்டிய தேவையில்லை என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பல்வேறு கட்டடங்களைக் கட்டித் தர வேண்டுமென்று

கோரியுள்ளார். நிதிநிலைக்கேற்ப அந்தக் கட்டடங்கள் கட்டித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலூர் தொகுதியில், கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில், சூரப்பட்டி ஊராட்சி, பொட்டப்பட்டி ஊராட்சி, சென்னகரம்பட்டி ஊராட்சி, பட்டூர் ஊராட்சி, மேலவளவு ஊராட்சி, எட்டிமங்கலம் ஊராட்சி, மேலூர் ஒன்றியத்தில், புதுச்சுக்காம்பட்டி ஊராட்சி, சூரக்குண்டு ஊராட்சியில் உள்ள அரசப்பன்பட்டி, அ. வலையப்பட்டி ஊராட்சியில் உள்ள கோணவராயன்பட்டி ஆகிய பகுதிகளில் மின் பற்றாக்குறை இருப்பதால் அதை சரிசெய்து தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும் பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக இருக்குமென நினைக்கின்றேன். மின் பற்றாக்குறை என்ற பேச்சுக்கு இடமில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதிகளில், எந்தெந்த இடங்களில் மின் அழுத்தம் குறைவாக இருக்கின்றதோ, அந்தப் பகுதிகளில் துணை மின் நிலையங்களோ அல்லது மின்மாற்றிகளோ அமைக்கப்படும். இதுபோன்ற மின் அழுத்தம் குறைவாக இருக்கின்ற பகுதிகளுக்காக, 129 துணை மின் நிலையங்களை அமைக்க விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பு செய்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, தேவையான பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூலை 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்களுக்கு இந்தக் கூட்டத் தொடரில் மட்டும் ஏற்கெனவே ஒரு மூலக் கேள்வியும், 6 துணைக் கேள்விகளும் கேட்க அனுமதியளிக்கப்பட்டுள்ளன. தற்போது 7–வது துணைக் கேள்வி கேட்க அனுமதியளித்திருக்கிறேன். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எனக்குப் பேச வாய்ப்புத் தருவதில்லை என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவேதான், நான் இந்த வாய்ப்பை உங்களுக்குத் தருகிறேன், நீங்கள் பேசுங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக்க நன்றி. நான் வாய்ப்புத் தரவில்லை என்று சொல்லவில்லை. கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என் பெயரைக் குறிப்பிடவில்லை என்று தெரிவித்தேன். ஒரு வருடம் போராடிக் கொண்டிருந்தேன். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இப்போது கேள்வி கேளுங்கள்.*

திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதிக்குட்பட்ட வடகரை கீழ்பிடாகை பேரூராட்சியில் கிட்டத்தட்ட 25,000 மக்கள் வசிக்கின்றார்கள். அந்தப் பகுதியில் மின் கட்டண வசூல் மையம் ஏற்கெனவே இருந்தது. அது மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியிலுள்ள மக்கள் வெளிப் பகுதிக்குச் சென்று மின் கட்டணத்தைச் செலுத்தக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதன் காரணமாக, வடகரை கீழ்பிடாகை பேரூராட்சிப் பகுதியிலேயே மின் கட்டண வசூல் மையத்தை அரசு ஏற்படுத்தித் தருமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேரூராட்சிப் பகுதிகளில் இருந்த மின் கட்டண வசூல் மையத்தை மாற்றியுள்ளார்கள் என்று தெரிவித்துள்ளார். அங்கே மின்சார வாரியத்தின் பிரிவு அலுவலகம் இருக்கும், அங்கே மின் கட்டணத்தைக் கட்டிக்கொள்ளலாம்.*

அப்படியில்லையென்றாலும்கூட, அங்கே இருக்கின்ற தபால் அலுவலகம் அல்லது வங்கிகள்மூலம் மின் கட்டணத்தைக் கட்டலாம். அதுமட்டுமல்லாமல், இப்போது வீட்டிலிருந்தே கணிணிமூலம் மின் கட்டணத்தைக் கட்டிக்கொள்ளலாம் என்ற ஒரு புதிய வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றோம். கூடிய விரைவில் மின் கட்டணம் கட்டுவதற்கு Mobile Apps வசதியும் வரவிருக்கின்றது. இதுபோன்ற வசதிகள் வருகின்றபோது அவர்கள் மின் கட்டணத்தைக் கட்டிக்கொள்ளலாம். எனவே, அதற்காக ஒரு மின் கட்டண வசூல் மையம் தேவையில்லை. அந்தப் பகுதியிலே இருக்கின்ற வங்கியையோ அல்லது தபால் அலுவலகத்தையோ பயன்படுத்திக்கொள்ளலாம். அப்படியில்லையென்றால், வீட்டிலே இருப்பவர்கள் Computer வைத்திருந்தால், அதன்மூலமும் மின் கட்டணம் செலுத்தலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்லபாக்கம் பேரூராட்சிப் பகுதியில் இருப்பவர்கள் மின் கட்டணம் கட்டுவதற்கு தாம்பரம் நகராட்சி, சேலையூர் பகுதிக்குச் சென்று மின் கட்டணத்தைச் செலுத்துகிறார்கள். சிட்லபாக்கம் பகுதியில் துணை மின் நிலையம் இருக்கிறது. அது மையப் பகுதியில் இருக்கிறது. அங்கே ஒரு மின் கட்டண அலுவலகம் அமைத்தால் வசதியாக இருக்கும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டணம் வசூல் செய்வதற்காக தனியாக அலுவலகம் அமைப்பதில்லை. அப்பகுதியில் மின் வாரியத்தின் பிரிவு அலுவலகம் இருந்தால் அங்கு மின் கட்டணம் வசூல் செய்கிறார்கள். துணை மின் நிலையம் இருந்தால் அங்கு இருக்கின்ற அலுவலகத்தில் மின் கட்டணம் வசூல் செய்கிறார்கள்.

இப்போது சென்னை பெருநகர மாநகராட்சியாக வளர்ந்துவிட்டது. நான் ஏற்கெனவே சொன்னதுபோல, மின் கட்டணம் செலுத்த பொதுமக்களுக்கு எத்தனையோ வழிகள் இருக்கின்றன. தபால் அலுவலகம், வங்கிகள் மூலமாக மின் கட்டணம் கட்டலாம். மேலும், கணினி மூலமாக மின் கட்டணம் கட்டுகின்ற வசதியும் இருக்கின்றது. இன்னும் கூடிய விரைவில், Mobile Apps வசதியும் வர இருக்கின்றது. அப்போது அவரவர் வீடுகளில் இருந்து மின் கட்டணத்தைக் கட்டிக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 164, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

164—

அங்கன்வாடி மையம்

***16384—திரு. எ. ராமர்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளித்தலை தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், போத்துராவுத்தன்பட்டி ஊராட்சி, வடுகப்பட்டியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு குளித்தலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குளித்தலை தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், போத்துராவுத்தன்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த வடுகப்பட்டியில் அங்கன்வாடி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்ற வினாவை எழுப்பியுள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், குளித்தலை சட்டமன்றத் தொகுதி, கிருஷ்ணராயபுரம் ஒன்றியம், போத்துராவுத்தன்பட்டி ஊராட்சி, வடுகப்பட்டியில் அங்கன்வாடி